**தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 16 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதி நிர்வாகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமானப் பெறுவனவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 ஆந் திதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபன பிரிவினால் கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் சட்டக் கட்டணங்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 78,319,557 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 31,537,787 அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வருமானம் ரூபா 46,781,770 ஆன போதிலும் நிதிக் கூற்றுக்களில் (ACA-1(1)) நிலுவை வருமானமாக | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக கூட்டுத்தாபன பிரிவினால் கட்டணங்களுக்காக மொத்த பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 78,319,557 ஆகும். மீளாய்வாண்டினுள் ரூபா 32,164,697 அறவிடப்பட்டுள்ளதுடன் அதற்கமைய நிலுவை வருமானம் ரூபா 46,154,860 ஆகும். | அறவிடப்பட்டிருந்த நிலுவை வருமானத்தின் சரியான தன்மை உறுதிப்படுத்தப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 46,154,860 குறிப்பிடப்பட்டிருந்த மையால் அத்திகதியில் உள்ளபடியான நிலுவை வருமானத்தில் ரூபா 626,910 ஆன வேறுபாடொன்று நிலவியது. | | |
| (ii) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ACA-1(i) மாதிரியில் கடந்த வருடங்களுக்கு முன்னைய வருடங்களுக்காக நிலுவை வருமான மீதிகளை காண்பிக்கும் போது கடந்த வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளபடியான மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ஆகியவற்றுக்கிடையிலான ரூபா 12,311,617 ஆன வேறுபாடொன்று நிலவியது. அத்துடன் அதற்கான வெளிப்படுத்தல்கள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கு முன்னைய வருடங்களில் பட்டியலிடப்பட்ட போதிலும் தவறுதலாக கணக்கு வைக்கப்பட்டிராத சில பட்டியல்கள் கணக்கு வைக்கப்பட்டு உரிய மீதிகளை திருத்துதல் இவ்வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தது. | கடந்த வருடத்திற்கு கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் முன்னைய வருடங்களில் அதனோடொத்த மீதிகளாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அந்தந்த செலவின விடயங்களுக்குரிய செலவினங்கள் அந்தந்த செலவின விடயங்களில் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் அங்கீகரிக்கப்பட்ட செலவின விடயத்திற்கு உரித்தற்ற ரூபா 6,869,252 ஆன செலவினங்கள் (மாற்றல் பத்திரம் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் பின்னர்) தவறுதலாக வேறு செலவின விடயங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன், | • கணனி இயந்திரத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை புனரமைத்தல் (2002) செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>• புதிய உத்தியோகபூர்வ இல்லமொன்றிற்கு தளபாடங்கள், ஏனைய | அந்தந்த செலவின விடயங்களுக்குரிய செலவினங்கள் உரிய செலவின விடயங்களின் கீழ் சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| வருடாந்த நிதிக்கூற்றுக்களில் ACA-2(i), ACA-2(ii), ACA-3(iii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களின் தவறான நிலைமையொன்று வெளிக்காட்டப் படுகின்றது. | தளபாடங்கள் (மெத்தை, மெத்தை உறை, கைதுடைக்கும் துண்டு, கால்மிதி) ஆகியவை கொள்வனவு செய்தல் ஏனைய மீண்டெழும் செலவினம் (229-01-01-0-1409) கீழ் ரூபா 188,568 தொகையும் தளபாடக் கொள்வனவுகள் (229-01-01-0-2102) கீழ் ரூபா 1,000,000 தொகையும் ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்தல் (229-01-01-0-2103) கீழ் ரூபா 1,408,360 தொகையும் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>• கூட்டுத்தாபன பிரிவின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக சட்டம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் களுக்கு கூட்டிணைந்த படிகள் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் அப்பிரிவின் மின்சாரப் பட்டியல் செலவினம் 229-1-1-3-1409 (கூட்டுத்தாபன பிரிவு) செலவின விடயத்தின் கீழ் சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு கடன்பட்டோரிடமிருந்தும் அறவிடப்பட்டிருந்த மீதி இனங்காணப்படக் கூடிய வகையில் நிலுவை வருமானத்தை அறவீடும் செய்யும் பட்டோலையொன்று முன்வைக்கப்படாமையால் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 57,241,617 ஆன நிலுவை வருமான அறவீடுகளின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமான அறவீடுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதற்காக பட்டோலைகள் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வருமானங்களை அறவீடு செய்வதிலான நலிவுகள்** | | |
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கடந்த வருடத்திற்குரிய நிலுவை வருமானம் ரூபா 75,591,785 ஆக காணப்பட்டதுடன் கடந்த வருடத்திற்கு முன்னைய வருடங்களுக்குரிய நிலுவை வருமானம் ரூபா 245,551,757 ஆகும். அவற்றுள் மீளாய்வாண்டில் அறவீடுகள் முறையே ரூபா 40,039,787 மற்றும் ரூபா 17,201,830 ஆக காணப்பட்டதுடன் அது | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் சட்ட பணிகளுக்காக உரிய பட்டியல்கள் அந்நிறுவனங்களுக்கு உரிய திகதிகளில் அனுப்பப்பட்ட போதிலும் கொடுப்பனவு மேற்கொள்வதில் தாமதமொன்று காணப்படுகின்றது. அவை அரச நிறுவனங்கள் என்பதால் உரிய சட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக | நிலுவை வருமானம் காலதாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிலுவை வருமானத்தின் 52 சதவீதம் மற்றும் 7 சதவீதம் ஆகிய குறைந்த சதவீதங்களை கொண்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 310,056,785 ஆகும்.

மேற்கொள்ளப்படுவதுடன் கட்டண அறவீடுகள் துரிதப்படுத்துவதற்காக அவ்வவ்போது கடிதங்கள் மற்றும் தொலைபேசி ஊடான நினைவுறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(ஆ) வருமான நிலைமைகளினை காலத்திற்குக் காலம் மீளாய்வு மேற்கொள்ளப்படாமை**

---

2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நிலவும் பொருளாதார நிலைமைகளின் மாற்றங்களை கருத்தில் கொண்டு சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் அச்சேவைகளை வழங்குவதற்கான செலவினங்களை கருத்தில் கொண்டு காலஅடிப்படையில் திருத்தங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் சட்டமா அதிபத் திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்காக ரூபா 78,319,557 ஆன வருமானம் (பட்டியலிடப்பட்ட வருமானம்) சேகரிக்கப்படுவதற்காக விசேட பதவியணி சம்பளங்கள் மற்றும் ஊக்குவிப்பு படிகள் சட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தும் விசேட படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் எழுதுகருவி

நிலவும் பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்களை திருத்துதல் தொடர்பில் இவ்வருடத்தில் கவனம் செலுத்தப்படும்.

பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு அறவிடப்படும் சேவைக் கட்டணங்களை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்ய வேண்டும்.

உள்ளடங்கலான செலவினங்களுக்காக ரூபா 89,982,869 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை திணைக்களத்தின் வருமான பேரேடு மற்றும் திறைசேரியின் கணனி அச்சீட்டின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை தயாரிக்காமையால் மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒட்டுமொத்த மீண்டெழும் செலவின விடயங்கள் 19 இன் 05 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவின விடயம் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 40,300,000 ஆன நிதியேற்பாடு ஏனைய மீண்டெழும் செலவின விடயங்கள் 03 மற்றும் ஒரு மூலதன செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்காக நிர்மாணிக்கப்படும் புதிய கட்டிடத்தை திறக்கும் விழா, சட்டமா அதிபரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு தேவையான தளபாடங்களை கொள்வனவு செய்தல், அக்கட்டிடத்தினுள் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான எழுதுகருவிகள், அலுவலக உபகரணங்கள், நீர் மற்றும் மின்சாரம் போன்ற மீண்டெழும் செலவினங்களுக்காக உரிய நிதியேற்பாடானது 2021 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட போதிலும் போதிய நிதியேற்பாடு கிடைக்காத காரணத்தால் அச்செலவினங்களை தீர்ப்பதற்கு நிதியேற்பாடு எஞ்சிய செலவின விடயங்களின் நிதியேற்பாடு மாற்றப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பொழிப்பு அறிக்கை வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொடர்ந்தும் மிகவும் நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் | சிக்கனமாகவும் செயற்திறனாகவும் உரிய முறையில் கவனம் செலுத்தி முன்னோக்கிய வகையில் அனைத்து சேவைகளையும் உள்ளடக்கிய நடைமுறைக்குச் சாத்தியமானதும் சரியானதுமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் உடன்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு III) அல்லது திறைசேரியின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையின் (SA-92) இன் பொறுப்புக்கள் எவையும் பதிவு செய்யப்பட்டிராத போதிலும் 26 சந்தர்ப்பங்களின் கீழான ரூபா 9,008,408 ஆன பொறுப்புக்களுக்காக 2022 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த அனைத்து கொடுப்பனவுகளும் 2022 சனவரி மாதம் கிடைத்த பட்டியலுக்குரியவை ஆகும். ஒவ்வொரு மாதத்தினதும் மின்சாரம் மற்றும் நீர், தொலைபேசி, மேலதிக நேர படிகள், இணையத்தள வசதிகள் மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வது குறித்த மாதம் கடந்த பின்னர் அதற்கு அடுத்த மாதத்திலேயாகும். | எதிர்வரும் வருடங்களில் செலுத்துவதற் குள்ள அனைத்து பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களும் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டியமை. |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் பிரகாரம், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

**அவதானிப்புக்கள்**

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104/(1)அ | - | 33 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்பகட்ட பரீட்சிப்பாவது மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2021-11-15 ஆந் திகதியின் பின்னர் இடம்பெற்ற அனைத்து விபத்துக்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நிதிப்பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 232(2) | | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் பெறுமானங்கள் எழுத்திலும் இலக்கத்திலும் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பெரும்பாலனவற்றின் செலுத்தும் தொகை எழுத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | தாமதத்தின் காரணமாக சில கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் செலுத்தும் தொகை எழுத்தில் பதிவு செய்தல் கைவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 237 | - | களஞ்சிய விநியோகங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது கொடுப்பனவு உறுதிச்சீட்டின் பொருட்கள் கிடைத்துள்ளதாகவும் உரிய பொருட் பதிவேடுகளில் இருப்பு புத்தகங்கள் போன்றவை உள்ளடக்கப் பட்டமைக்கான சான்றிதழொன்று இணைக்கப்பட்டிருக்க வில்லை. | களஞ்சிய விநியோகங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்குரி ய பொருட்கள் கிடைத்துள்ளமைக்காக மற்றும் குறித்த பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட மைக்கான சான்றிதழொன்று கட்டாயமாக இணைக்கப்படுவதுடன் அவ்வாறான தவறுதலொன்று இடம்பெற்றிருப்பின் அதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். | - மேற்படி - |
| (iv) | நிதிப் பிரமாணம் 273 | 550,015 | 07 மோட்டார் வாகன பழுதுபார்த்தலுக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ளப்படாது கொடுப்பனவொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. | 2021 மே மாதம் முதல் நிதிப்பிரமாணம் 273 இன் பிரகாரம் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சான்றிதழின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (v) | நிதிப் பிரமாணம் 1642 | - | மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த 33 வாகன விபத்துக்களில் பொலிசிற்கு அறிக்கையிடப்பட்டிருக் க வில்லை. | அவசர விபத்துக்களுக்குரிய நட்டஈட்டை செலுத்தும் போது காப்புறுதி நிறுவனத்தினால் பொலிஸ் அறிக்கையொன்று கோரப்படும் சந்தர்ப்பத்தின் மாத்திரம் தற்போது பொலிசிற்கு அறிக்கையிடப்படுவதுட ன் எதிர்காலத்தில் அனைத்து விபத்துக்கள் | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தொடர்பிலும் பொலிசில் அறிவிப்பதற்கு உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | திணைக்களத்திற்கு சொந்தமான 101 வாகனங்களின் எரிபொருள்களின் எரிவுப் பரிசோதனை இடம்பெற்றிருக்கவில்லை | வாகன உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு சாட்டப்பட்டுள்ள வாகனங்களுக்காக திணைக்களங்களின் எரிபொருள் விநியோகம் ஒன்று இடம்பெறுகின்றமையால் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப் படுவதில்லை. திணைக்களத்தின் எரிபொருள் விநியோகிக்கும் குழாத்தில் உள்ள அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 4.2.2 ஆம் பிரிவு | - | பெறுகைப் பணிகளை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் முதல் நிறைவு செய்யப்படும் சந்தர்ப்பம் வரையிலும் ஒவ்வொரு பெறுகை நடமுறையினதும் விபரங்களை காண்பிக்குமாறு விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் விரிவான பெறுகைகள் திட்டமொன்று எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை |

## 2.5 வைப்புக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காசோலைகள் மூலம் பல்வேறு வழங்கல்கள் சேவைகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டு செலவின விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டு காசோலைகள் வரையப்பட்டு திறைசேரியின் அங்கீகாரமின்றி அரச நிதியில் குறித்த ரூபா 27,271,695 ஆன 07 காசோலைகள் 08 மாதங்களுக்கு மேற்பட்ட காலம்திணைக்களத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டு 2021 ஆகஸ்ட் மற்றும் திசெம்பர் மாதங்களில் பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2021.12.31 ஆந் திகதி வரையிலும் இக்கொடுப்பனவுகள் இடம்பெற்றிருக்கவில்லை. | அனுராதபுரம் உயர் நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தின் புனரமைப்பு பணிகளுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் வடமத்திய மாகாண பிரதான பொறியியலாளரின் பெயரில் ரூபா 10,650,000 ஆன காசோலையொன்று வரையப்பட்டிருந்த போதிலும் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படாமையால் காசோலை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் காசோலை காலாவதியானமையால் அதனை இரத்துச் செய்து பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டது.<br><br>திணைக்களத்திற்காக நிர்மாணிக்கப்படும் புதிய கட்டிடங்களுக்கு தேவையான தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு காசோலை வரைவதற்கு நேர்ந்த போதிலும் குறித்த பொருட்கள் உரிய அமைப்புக் குறிப்பீடுகளின் பிரகாரம் விநியோகிக்கப் பட்டுள்ளதாக மதியுரை நிறுவனத்தின் பரிந்துரைகள் முன்வைக்கப்படாமையால் குறித்த பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டது. | வழங்கல் அல்லது சேவைகளை பெற்றுக் கொள்ளாது கொடுப்பனவு உறுதிச்சீட்டுக் களுக்குரிய பணம் செலுத்தப்படல் கூடாது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டங்கள் மற்றும் ஆண்டறிக்கைகள்

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய முன்னுரிமைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் எதிர்பார்த்த அடைவ மட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிற்காக தாங்கள் அனுப்பியுள்ள செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் எதிர்பார்த்த போட்டி மட்டங்கள் உள்ளடக்குதல் தவறுதலாக கைவிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

#### (ஆ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பிரிவின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையின் வரைபொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் கிடைத்தவுடன் செயலாற்றல் அறிக்கையின் வரைபொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையின் வரைபொன்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 3.2 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசிற்கு உச்ச நலன் கிடைக்கும் வரையில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கட்டிடமொன்றிற்காக மின்சார பட்டியல்களை செலுத்தும் போது மாதாந்த மின்சார நுகர்வு செலவினத்திற்கு மேலதிகமாக ரூபா 143,964 கூட்டுத்தொகையான மிகைக் கட்டணங்களை செலுத்தியிருந்ததாக 2021 சனவரி முதல் மே வரையிலுமான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. | வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்தின் குத்தகை உடன்படிக்கையில் நிலவிய தாமதம் காரணமாக அக்கட்டிடத்திற்குரிய மின்சார பட்டியலை செலுத்தும் போது ஏற்பட்ட சிக்கல் நிலைமையை தீர்க்கும் வரையிலும் கொடுப்பனவுகள் தாமதமானமையால் மேலதிக வட்டி தொகையை செலுத்த நேர்ந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்தி அரசிற்கு ஏற்படும் நட்டநிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அரசிற்கு நிதி நட்டமொன்று ஏற்படாத வகையில் அருகிலிருந்து மேற்கொள்ளப் படும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொவிட் தொற்றுநோய் நிலைமையின் தாக்கம் காரணமாக நாடு பொருளாதார ரீதியில் மிகவும் வீழ்ச்சியடைந்த நிலைமைக்கு தள்ளப்பட்டு அரச வருமானத்தை பெற்றுக் கொள்ளலும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் செயற்படுவதால் மீளாய்வாண்டினுள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட குறுகிய கூட்டங்கள், கலந்துரையாடல் களுக்கான உபசரணை செலவினமாக ரூபா 4,023,840 செலவிடப்பட்டிருந்தது. | சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பல்வேறு அரச நிறுவனங்களின் உயர் உத்தியோகத்தர்கள், பல்வேறு நாடுகளின் உயர்தானிகர்கள் ஆகியோருடன் நேர்முக கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் நடாத்தப்படுவதால் அவர்களுக்காக மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் அரசின் விசேட பணிகளுக்காக சட்டமா அதிபரை சந்திக்க வருகை | நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு அரச செலவினத்தை மிகவும் சிக்கனமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தரும் வெளிநாட்டு சட்டமா அதிபர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுக்காக உபசரணை மற்றும் விருந்து ஆகியவற்றை நடாத்துவதற்கு நேர்கின்றமையால் மிகவும் சிக்கலான நிலைமையிலும் கூட குறித்த உபசரணை செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. | |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 177 (I) பிரகாரம் நாளாந்தம் சேகரிக்கப்படும் வருமானம் தாமதமின்றி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் வருமானம் அரச வருமானத்திற்கு கணக்கு வைப்பதில் 07 முதல் 21 நாட்களுக்கு இடைப்பட்ட தாமதம் ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதிப்பிரமாணம் 177 (I) இன் பிரகாரம் சேகரிக்கப்படும் வருமானங்கள் தாமதமின்றி அரச வருமானத்திற்கு செலவு வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரச வருமானம் தாமதமின்றி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சிறு கட்டுநிதி ஒரே தடவையில் செலுத்தும் போது ரூபா 5,000 ஆன எல்லையை விஞ்சலாகாத போதிலும் மன்னார் அரச நீதிமன்ற உத்தியோகபூர்வ இல்லத்திற்கான ரூபா 20,000 ஆன சிறு காசு கட்டுநிதி ரூபா 5,000 தொகைக்கு மேலதிகமான செலவினங்களுக்காக 03 சந்தர்ப்பங்களில் ரூபா 38,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அவசர தேவைப்பாடுகளின் அடிப்படையில் 03 சந்தர்ப்பங்களில் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சிறு கட்டுநிதிகளை அவ்வாறான கொடுப்பனவுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கு பொறுப்பாக செயற்படுமாறு குறித்த உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது நாட்டினுள் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகம் அவ்வவ்போது மூடுவதற்கு நேர்ந்தமையும் 03 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவியமையின் காரணமாகவும் 2021 ஆம் ஆண்டிற்கான உரிய மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்க முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை அரசின் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்காக அனைத்து சட்ட சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனைகளை தாமதிக்காது வழங்குதல் மற்றும் அரசின் பரந்த நோக்கங்களை வியாபிக்கும் போது விசேடமான பணிகளுக்கு பங்களிப்பு செய்யும் உயர் மட்டத்தின் பதவிகளுக்குரிய மொத்த பதவியணியின் 305 அதாவது 58 சதவீதமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | சட்டமா அதிபர் திணைக்களத்தின் பழைய கட்டிடத்தில் போதிய இடவசதி இல்லாதிருந்தமையால் குறித்த சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ள முடியாதிருந்தது. புதிதாக நிர்மாணிக்கப்படும் புதிய கட்டிடத்தை திறப்பதுடன் உரிய வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புவதற்கு உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதுடன் தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார சிக்கல் நிலைமையின் அடிப்படையில் நிதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளல் கடினமானதாகும். | நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் பிரதான பணிகளை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்காக சிரேஷ்ட மட்டத்திலான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதை முன்னுரிமையான பணியாக கருதி செயற்பட வேண்டும். |